3–40 p.m. more appeal to the Hon. Minister and the Government to see that the low income groups and the middle class people are not put to unnecessary hardship. The burden imposed on them is beyond what they can bear. The Hon. the Finance Minister should represent to the Government of India to see that relief is given to them.

Thank you, Sir.

* திரு. பி. கே. நல்லசாமி: மன்றத் தலைவர் அவர்களே, இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதலில் தேசத்தில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலைமையை உத்தேசித்து நாம் நமது மாநிலத்தில் என்ன செய்திருக்கிறோம் என்பதைப் பற்றி அலசிப் பார்க்கும்போது, எனக்குக் கொஞ்சம் அதிருப்திதான் ஏற்படுகிறது. கொழும்பு மகாநாட்டு முயற்சிகள் வெற்றியடையாது என்கின்ற நிலையில், இன்று நமது

4th March 1963] *[திரு. பி. கே. நல்லசாமி]*

மாநிலமும் தேசமும் இருக்கிற ஒரு உற்சாகமற்ற தன்மையைப் பார்த்தால், மிகவும் வருத்தமடைய வேண்டிய நிலையில்தான் இருக்கிறோம். காரணம், துப்பாக்கி சத்தம் கேட்கும்போது, ஒரு வேகம் ஏற்படுவதும், உடனே சத்தம் கொஞ்சம் நின்றதும், தூங்கிப் போகக்கூடிய நிலையிலே நாம் இருக்கிறோமா என்ற ஒரு ஐயம் எனக்கு மனதில் கிளர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. நாம் போட்டிருக்கிற திட்டங்களில்கூட மக்களே வரக்கூடிய தேசப் பாதுகாப்புப் போர் மீண்டும் ஏற்படுமானால், அதற்கு உடல் வலிமை உடையவர்களாகவும் மன வலிமை படைத்தவர்களாகவும் ஆக்குவதற்கு வேண்டிய ஒரு திட்டத்தை நாம் போடவேண்டியது ரொம்ப அவசியம் என்று தோன்றுகிறது. இப்போது இருக்கக் கூடிய நிலை, குறிப்பாக இப்போதுள்ள மாணவர்களை எடுத்துக் கொண்டால், வருங்கால சுதந்திரப் போர்களை நடத்தக்கூடிய வீரர்கள் அவர்கள். அவர்களில் ஆண்களாக இருக்கிற எல்லா மாணவர்களுக்கும் என்.சி.சி., ஏ.சி.சி. பயிற்சி கொடுக்கக்கூடிய அளவில் நமது திட்டம் இல்லை. அந்த அளவில்கூட குறைபாடு இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஹோம் கார்டுகள் இப்போது நாம் எடுத்துக்கொண்டிருக்கிற அளவு நமது மாகாண ஜனத்தொகை அளவைப் பார்த்தால், ஒரு சதக்கணக்கு போடக்கூடிய நிலையில் இது வருமா என்ற நிலையில் அவ்வளவு குறைந்த பட்சத்தில் நாம் இருக்கிற வாய்ப்பு பட்ஜெட்டில் காணப்படுகிறது. கிராமத்தில் இருக்கிற தொண்டர்கள் உற்சாகமாக வேலை செய்யவேண்டுமென்றால், நான் சென்ற தடவையே சொன்னேன். உடனடியாகப் பயிற்சி கொடுப்பதற்கான திட்டம் செய்யவேண்டுமென்று. ஆனால் இன்னும் உருப்படியாக ஒன்றும் வந்ததாகத் தெரியவில்லை. போதிய விறுவிறுப்பு இல்லை என்றுதான் எனக்கு மனம் சங்கடப்படுகின்றது. இந்த நிலையில் இடைத் தேர்தல் வேறு நாம் ஆரம்பிப்பது என்று இன்று ஏற்பாடு செய்துவிட்டோம். நெருக்கடி நிலைமை இருக்கும்போது, இன்னும் ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு என்ன ஆகுமோ என்ற நிலைமை இருக்கும்போது, இடைத்தேர்தல் ஆகிய ஒரு பெரிய புயலைக் கிளப்பிவிட்டு ஒரு கட்சியை மற்றோர் கட்சி தாக்கி எந்த அளவுக்கு அதை நம் தேசப் பாதுகாப்பு நிலையைக் குலைக்க முடியுமோ, அந்த அளவுக்கு அதை விட்டு விட்டோம் என்றுதான் எனக்கு மிகுந்த அச்சமாக இருக்கிறது. துரதிருஷ்ட வசமாக காலியான ஸ்தானங்கள் ஆளும் கட்சியில் இருக்கிறவர்களுடையதாக இருக்கிறது. நமது முதல் அமைச்சர் அவர்கள் சொன்னர், இருக்கிற கட்சியில் எந்தக் கட்சி இருந்தார்களோ அவர்கள் கட்சியே காலி ஸ்தானத்தில் மீண்டும் இருக்கட்டும் என்று. இந்த நிலைக்கு யாரும் இப்பொழுது ஒப்ப மாட்டார்கள். ஏனென்றால் ஆளும் கட்சியைத் தோற்கடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் முதலமைச்சர் சொன்ன அதுவும் செயல்படாமல் போய்விடும். இந்த அளவில் நாம் ஒரு புயலைத்தான் கிளப்பிவிட்டிருக்கிறோம் என்பது என்னுடைய எண்ணம். இது நம் தேசப்பாதுகாப்பு ஒற்றுமைக்குப் பெரும் இடையூருக இருக்குமென்று தோன்றுகிறது. அந்தப் புயல் தேசப் பாதுகாப்பு முயற்சிக்குக் குந்தகம் இல்லாமல் இடையூருக இருக்காமல், நமக்குள்ள வேற்றுமைகளைப் பலப்பட்டு போகவிடாமல் பார்த்துக்

[திரு. பி. கே. நல்லசாமி] [4th March 1963

கொள்வதற்கு ஏதாவது செய்தாலொழிய ரொம்ப துரதிர்ஷ்டமான நிலைதான் வருமென்று எனக்குத் தோன்றுகிறது. பொதுமக்களுக்குக்கூட பாதுகாப்புக்கான முயற்சிகளில் பரந்த அளவில் பயிற்சி கொடுக்க வேண்டும். சில இடங்களில் டிரைவர்கள் பயிற்சி கொடுத்தோம். அவர்கள்கூட வேலையில்லாமல் அலைவதைப் பார்த்தால், மறுபடியும் அவர்கள் பயிற்சிக்கு வருவார்களா என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. பயிற்சி கொடுக்கப்பட்டவர்களுக்கு வேலை உடனே நாம் நெருக்கடி நிலையில் கொடுக்காமல் இருக்கிறோம். எனக்குத் தெரியும், பயிற்சி பெற்ற டிரைவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதனால் இப்பயிற்சிக்கு மக்கள் வந்து சேர்வதற்கு அவர்களுக்கு ஊக்கம் குறைந்துவிடுகிறது. அதே மாதிரி டாக்டர்கள், நர்சுகள் மற்றவர்கள் தயாரிப்பதில்கூட குறிப்பாக டாக்டர்கள், நர்சுகள் தேசபக்தியை அவர்களுக்கு ஊட்டினாலும் பணத்தில் இருக்கிற முக்கியமான மோகத்தின் காரணமாக அதிகம் பேர் முன்வருவது கஷ்டமாகத்தான் இருக்கும். ராணுவத்திற்கு டாக்டர்கள் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கும் போது, நர்ஸ் போன்ற மற்றவர்கள் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கும் போது, ராணுவத்திற்கென்றே ஒரு தொகை ஒதுக்கித் தேர்ந்தெடுப்பதுதான் நல்ல முறை என்று தோன்றுகிறது. ராணுவத்திற்குத் தேவையான வைத்தியக் கல்வி தனி மாதிரியாக இருக்கும். குண்டு காயம், தோட்டாக் காயம் படுவது இந்த மாதிரித் தனிவகையாகி சிகிச்சையில் அவர்கள் பழக வேண்டும். இரண்டாவது, பயிற்சி பெற்று வரக்கூடிய டாக்டர்கள் பிறகு அங்கு போய்த்தான் ஆகவேண்டுமென்ற நிலையிலே நல்ல பயிற்சி பெறுவார்கள் ஆகையால் இதற்குத் தனியாக செலக்ஷன் செய்யும் முறையில் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்களில், குறிப்பாக உணவு உற்பத்தியில், அதிகம் கவனம் செலுத்தவேண்டுமென்று திட்டமிட்டு யூனியன்கள் அமைத்தோம். ஆனால் பஞ்சாயத்து யூனியன்களில் பார்த்தால், ரோடு போடுவது, சில பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டுவது போன்றவைகளில் அதிக கவனம் செலுத்துகிறார்களே தவிர, எந்தக் கிராமத்தில் இவ்வளவு உற்பத்தி, எந்த தானியம் எவ்வளவு விளைந்தது என்பதைப் போன்ற ஆராய்ச்சியோ அதைப் போன்ற திட்டங்களோ அங்கு அதிகமாக செய்வதாகத் தெரியவில்லை. நடப்பதெல்லாம் அமோனியம் சல்பேட்டுக்குச் சண்டை. அதற்கு மேல் கிராம விதைப்பண்ணைகள். அவை நல்லமுறையில் நடக்கவில்லையென்று சொல்கிறார்கள். கிராம சகாயக்குகள் சரியான முறையில் இல்லை என்கிறார்கள். எங்கள் ஊரில் சர்க்கார் விதைப்பண்ணை இருக்கிறது. அங்கு
3-50 p.m. வந்த விதைகள் சரியாக முளைக்கவில்லை என்று தாராபுரம் டி.டி.சி. யில் புகார் வந்திருக்கிறது. அதனால் சில இடங்களில் ஒரு வேளை நல்லமுறையில் இருக்கலாம்; சில இடங்களில் நல்ல முறையில் இல்லாமலிருக்கலாம். நான் கிராம விதைப் பண்ணையைப் பற்றிச் சொல்லுகிறேன். சர்க்கார் விதைப் பண்ணையைப் பற்றிச் சொல்லவில்லை. கிராம விதைப் பண்ணை சரியாக நடக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. கிராம சகாயக்காக அதிகாரிகள்

4th March 1963] *[திரு. பி. கே. நல்லசாமி]*

தங்கள் இஷ்டப்படி நடக்கிறவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் அதனால் கிராம சகாயக் தன் வேலையை சரியாக கவனிப்பதில்லை. இப்போது கிராமத்தொண்டர் படை அமைத்திருப்பதன் காரணமாக ஒரு சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. கிராம சகாயக்குகளை நியமனம் செய்கிற உரிமையை, அதிகாரத்தை இந்தத் தொண்டர்களிடத்தில் விட்டுவிட்டால், சரியான சகாயக்குகள் வந்து சேருவார்கள். அதிகாரிகள் நியமிப்பதால், சரியான சகாயக்குகள் வருவதில்லை. கிராமத் தொண்டர்கள் 40 பேர் கூடி சகாயக்குகளை நியமித்தால், நிச்சயம் நல்ல சகாயக்குகள் வருவார்கள். ஆகவே, இதை நிவர்த்தி செய்ய இப்போது வழி ஏற்பட்டிருக்கிறது.

எல்லாவற்றையும்விட மிக முக்கியமானது, இதை நான் ரொம்ப நாளாக இங்கும் சொல்லுகிறேன், மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலிலும் (District Development Council) சொல்லுகிறேன், அதில் இன்னும் கவனம் சரியானபடி செலுத்தப்படவில்லை—முக்கியமானது உரம், மனித மல உரம். கிராமங்களில் இன்னும் சரியான கம்போஸ்டு உரம் செய்யப்படுவதில்லை. அதற்கான திட்டத்தைப் பஞ்சாயத்து யூனியன்களும் செய்யவில்லை. கம்போஸ்டு தயார் செய்வது என்று போட்டிருக்கிறோமே ஒழிய, நடைமுறையில் என்ன நடைபெறுகிறது என்றால், எல்லாம் Bogus குழிகள். கம்போஸ்டு குழி என்று பெயர் இருக்கும்; அதற்குப் பணம் வாங்கியாகியிருக்கும்; ஆனால் அந்தப் பணம் விவசாயிகளுக்குப் போய்ச் சேருவதில்லை. காரணம் என்னவென்றால் கம்போஸ்டு குழி ஒன்றுக்கு ரூ. 3 கொடுக்கப்படுகிறது. இந்த 3 ரூபாய் வாங்குவதற்கு, விவசாயி நான்கு மைல் நடந்து வந்து, பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் காத்துக்கொண்டிருக்கவேண்டும். பல இடங்களில் பொய்க்கணக்கு எழுதி பணம் வாங்கியிருக்கிறார்கள். இதனால் கம்போஸ்டு தயாரிப்பதில் பெருவாரியான கிராமங்களில் உற்சாகமில்லாமல் இருக்கிறது. இதற்கு ஏதாவது வழி வகை செய்தாக வேண்டும். இதை இந்த கிராமத் தொண்டர் படை கூட செய்யலாம். கிராமத்தில் இந்தத் தொண்டர்கள் இன்றைக்கு காக்கி டிரஸ் போட்டாகி விட்டது. ஆனால் என்ன வேலை செய்வது என்று மாத்திரம் இன்னும் உருப்படியாக எதுவும் ஏற்படவில்லை. வேலையும் உருப்படியாக எதுவும் தொடங்கவில்லை. காவற்படையைச் சேர்ந்தவர்கள் மாத்திரம், ' left, right ' போட ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகையால் இதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி, இன்னும் ஊக்குவித்தால் ஒழிய, சரியான முறையில் பஞ்சாயத்து யூனியன்கள் இந்த கம்போஸ்டு தயாரிக்கும் திட்டத்தில் ஈடுபடாததால் லட்சியம் நிறைவேறாது. லட்சியம் நிறைவேற வேண்டுமானால், அதிக கவனம் இவைகளில் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இப்போது பரம்பிக்குளம்—அலியார் வாய்க்கால் பாசனத்துக்காக திறந்துவிடப்பட்டிருக்கிறது. அதிலும் அங்கே இருக்கக்கூடிய பல விவசாயிகளுக்கு இப்போது நில உச்ச வரம்புச் சட்டத்தால் சில நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதை

எடுத்துக்கூற விரும்புகிறேன். மேட்டூர், கீழ்பவானி போன்ற வாய்க்காலில் எல்லாம் நஞ்செய்ச் சாகுபடித் தண்ணீர் விடப் பட்டிருக்கிறது. ஆனல் அலியார் பிரதேசத்தில் புஞ்செய்ச் சாகு படிக்குத்தான் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும் போதுகூட, சர்க்கார் நீர்ப்பாசன வசதி செய்துகொடுத்தால், உடனே அது உச்ச வரம்புச் சட்டத்தில் வந்து விடுகிறது. நீர்ப் பாசன வசதி செய்துகொடுக்காது இருக்கும்போது, மேட்டு நிலம் 120 ஏக்கரா வரையிலும் ஒருவர் வைத்துக் கொள்ள முடியுமென் ருல் இப்போது 52½ ஏக்கராதான் உச்சவரம்பில் வரக்கூடிய நிலே இருக்கிறது. அதுவும் புஞ்செய் வெள்ளாமைக்கு எடுக்கும்போது, நிலத்தின் விலேயை அதிகமாக உயர்த்திவிடும் என்று யாரும் எதிர் பார்க்க முடியாது. நஞ்செய் நிலமாக இருந்தால், நிலத்தின் விலேயும் உயர்ந்துவிடும். அந்த முறையில் இன்னும் பல திட்டங்கள் வர இருக்கின்றன. இந்த நிலேயில் பல பேர் பாதிக்கப்படக்கூடிய நிலேயில் இருக்கிருர்கள். இதை கவனித்துப் பார்த்து, ஓரளவு இந்த நிலேயை, விசேஷமாக ஏற்பட்டிருக்கிற இந்த நிலேயைக் கருத்தில் கொண்டு, உச்ச வரம்புச் சட்டத்தை ஏதாவது திருத்த முடியுமானல் நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

கடைசியாக, பொன், வெள்ளித் தொழிலாளர்பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். பொன் வெள்ளித் தொழிலாளர் கூட்டத்திற்கு நான் சென்றிருந்தேன். உடனடியாக அவர்களுக்கு வேண்டிய 14 காரட்டு தங்கத்தை **Release** செய்தால், அவர்கள் பிரச்னே ஏறக்குறைய தீர்ந்துவிடும் என்று சொல்லலாம். அதற்கு அரசாங்கம் ஏதாவது செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். 14 காரட்டு தங்கத்தை **Release** பண்ணிவிட்டால், சிறிதளவாவது வேலே தொடங்கப்பட்டு அவர்கள் பட்டினி நிலேயும் நீங்கும். நான் தாலிக்கு 24 காரட்டு தங்கம்தான் வேண்டுமென்று சொல்லுகிற கோஷ்டியைச் சேர்ந்தவன் அல்ல. எங்கள் பக்கத்தில் என்னு டைய சகோதரிகள், தாய்மார்கள் தாலியாக மஞ்சளேக் கட்டிக் கொண்டிருப்பவர்களே ஆயிரக்கணக்கில் பார்க்கலாம். நான் காண் பிக்கத் தயாராயிருக்கிறேன். ஆதலால் 14 காரட்டு தங்கத்தில் தாலி செய்து போட்டுக்கொள்ளுவது சாஸ்திர ரீதியாகவோ அல்லது வேறு எந்த வழியிலோ குறைவானதாக ஆகிவிடாது. 14 காரட்டு தங்கத்தில் தாலி செய்து போட்டுக் கொள்ளுவதால், ஹிந்து தர்மமே ஒழிந்துவிடும் என்று எந்தத் தாய்மார்களாவது அல்லது வேறு யாராவது கருதினல், அது தவருன கருத்தாகும். எங்கள் ஊரில் மஞ்சள் கயிற்றில் மஞ்சள் காம்பைக் கோர்த்து தாலியாகக் கட்டிக் கொள்ளுவதைக் கௌரவமாகக் கருதுகிருர் கள். 14 காராட் தங்கத்தில் தாலி போடுவதால் மோசம் போய்விடும் என்று கூச்சல் போடுவதை அரசியல்வாதிகள் வைத்துக் கொள் ளட்டும். தாய்மார்களில்கூட எல்லாத் தாய்மார்களும் 14 காரட் தங்கத்தில் தாலி போட்டுக்கொள்ளுவதை தாழ்வாகக் கருதி ஆட்சேபிக்கிருர்கள் என்று சொல்லமுடியாது. ஆனல் அரசியல்

வாதிகள்தான் பலமாக எதிர்த்து, ஒலிபெருக்கி வைத்துப் பேசு கிறார்கள். நியாய புத்தியுள்ள பொன் தொழிலாளர்கள் உடனடியாக 14 காரட் தங்கத்தை வெளியிட வேண்டுமென்றுதான் கோரு கிறார்கள்.

தங்கத்தை மகாத்மா காந்தி அவர்கள் முடக்கப்பட்ட மூல தனம், **Dead capital** என்று சொன்னார்கள். கடன் வாங்க உதவுமே தவிர, வேறு எதற்கும் உபயோகப்படாது. ஆதலால் ஓரளவுக்கு தங்க மோகத்தைக் குறைக்க இந்தச் சட்டத்தை நல்ல அளவில் பயன்படுத்துவதற்கு நாமெல்லோரும் பாடுபட வேண்டும். அதிலும் குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களாக, மக்கள் பிரதி நிதிகளாக இருப்பவர்களாகிய நாம் பாடுபடவேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். தங்கத்தில் ஏற்பட்டிருக்கிற பெரிய மோகத்தைத் தவிர்க்க இது நல்ல வாய்ப்பு. தாலி 14 காரட்டாக இருந்தாலும், அல்லது இன்னும் கொஞ்சம் கம்மியாக இருந்தாலும், அதனால் அழகு குறைந்து விடாது, புனிதத் தன்மையும் குறைந்துவிடாது என்று தெரிவித்துக்கொண்டு, 14 காரட்டு தங்கத்தை உடனடியாக வெளியிட நமது அமைச்சரவை ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்** : கனம் தலைவர் அவர்களே, வருஷா வருஷம் சர்ச்சைகளும் அதற்குத் தகுந்த முறையில் சட்ட சபைகளில் நடவடிக்கைகளும் நடக்கின்றன. ஆனால் அதை எவ்வளவு தூரம் நடைமுறையில் கொண்டு வருகிறது என்பதைப் பார்க்கும்போது ரொம்பவும் குறைவாகத்தான் இருக்கிறது. நான் யாரையும் குறை கூறிப் பேசவில்லை. நான் அதிகமாகப் பேசுவதில்லை. சென்ற வருஷம் பேசினேன். இப்பொழுது பேசுகிறேன். குறிப்பாக அவர் தெரிவித்தபடி நாட்டின் நிலைமை மத்திய அரசாங்கத்தைத்தான் சேர்ந்தது என்ற எண்ணத்தில்தான் நாம் எல்லோரும் இருக்கிறோம் என்று தான் நினைக்கிறேன். மத்திய அரசாங்கம் என்றும் போலத்தான் இருக்கிறது. பேச்சுதான் இருக்கிறது. காரியத்தில் ஒன்றும் இல்லை. செய்வது போல் சொல்லுகிறார்கள் அவ்வளவுதான். ஆகையினால் மாகாண அரசாங்கத்திற்குப் பொறுப்பு உண்டு. மத்திய அரசாங்கம் எல்லாவற்றையும் செய்துவிட முடியும் என்று நான் இப்பொழுது நினைக்கவில்லை. நாட்டின் பாதுகாப்பை அவர்கள் மாத்திரம் செய்து விடுவார்கள் என்று நான் நம்பிவிடவில்லை. முன்பே தெரியும், அவர்கள் எவ்வளவு அதிகப் பேச்சு, குறைந்த வேலை என்பது. நாமும் அப்படியே கோட்டை கட்டிக்கொண்டு செல்லுவோம் என்றால், சென்ற 15 ஆண்டுகளாக அநுபவித்துவரும் சுதந்திரம் எந்த முறையில் பாதிக்கப்படலாம் என்பதை இன்னும் இரண்டொரு மாதங்களில் தெரிந்துகொள்ளலாம். கடவுள் எதிரிகளுக்கு நல்ல புத்தியைக்கொடுத்து, நமக்கும் உற்சாகத்தைக் கொடுத்து நாம் செய்யவேண்டிய கடமையைச் சரியாகச் செய்ய ஆரம்பித்தால் அரசாங்கம் எந்தத் திட்டங்களையும் நல்ல முறையில் நடத்த முடியும். ஆகையினால் மத்திய அரசாங்கத்தையே எதிர்பார்த்துக்

4–00 p.m.

[திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்] 4th March 1963

கொண்டு நாம் செய்யவேண்டிய கடமையை எல்லாம் அவர்கள் செய்வார்கள் என்று ஏதோ சட்டரீதியாகச் சொல்லிக்கொண்டு இருந்தால் போதாது. சில சமயத்தில்தான் சட்டம் வேலை செய்யும். அதற்கு அனுகுணமாக ஊக்கம் இல்லை என்றால், நாம் ஊக்கம் உண்டாக்கும் நிலைமையில் அந்தந்த மாநில அரசாங்கங்கள் வேலையைத் துவக்கி மத்திய அரசாங்கத்தை ஊக்குவிக்கும் வகையில் வேலை செய்தால்தான் சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியும். சென்ற வருஷம் அதிகமாகப் பேசினேன். எனக்கும் வருத்தம். நான் பேசியது எனக்குத் திரும்ப அனுப்பப்பட்ட போது ஏண்டா பேசினேன் என்று நினைத்தேன். இப்பொழுது அது குறைவு என்று நினைக்கிறேன். அவரவர்கள் கடமையைச் செய்வதாக ஒப்புக்கொண்டு செய்யவில்லை என்றால், அவர்களோடு போகவில்லை, நாட்டில் இருக்கிற 45 கோடி மக்களுடைய நிலைமை அவர்களைப் பொறுத்துத்தான் இருக்கிறது. நமக்குப் பொறுப்பு அதிகம் என்பதை மறந்துவிடக்கூடாது. எப்பொழுதும் தினசரி பத்திரிகைகளை, நான்கு மாதங்களாகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன், ஜனங்கள், ஜனங்கள் என்று அவரே பேசிக்கொண்டு இருக்கிறார். ஜனங்கள் செய்யவேண்டியதைச் செய்துகொண்டு தான் இருக்கிறார்கள். அரசாங்கத்தில் இருந்துகொண்டு செய்ய வேண்டியவர்கள் தங்கள் கடமையைச் செய்யவில்லை என்பதுதான் ஜனங்களுடைய எண்ணம். இதைச் சொல்லுவதற்கு யாரும் தயங்குகிறார்கள். அரசாங்கத்தில் power பணம் கையில் வைத்துக்கொண்டு, ஒழுங்கு, கட்டுப்பாடு, சைன்யம் இவற்றை எல்லாம் வைத்துக்கொண்டு, எதிரிகள் நம்மை எப்படி ஏமாற்றலாம் என்று பேசிக்கொண்டு தொல்லை கொடுக்கும்படியான நிலையில் இருந்துகொண்டிருக்கும்போதும் நாம் இப்படியே இருந்தால் என்ன என்று எனக்கே தெரியவில்லை. இதற்கு மேலே எனக்கு இப்பொழுது எதுவும் பேசும் உத்தேசம் இல்லை.

இதுவரையில் ஜனநாயக அரசாங்கங்கள் இருக்கவேண்டும் என்பதுதான் நம் எல்லோருடைய எண்ணமும். இதுவே கம்யூனிஸ்ட் மத்திய அரசாங்கமாக இருந்தால் நாம் பேசவே முடியாது. ஜனநாயகத்தை நாம் எவ்வளவு நன்றாக முன்வந்து நடத்த வேண்டுமோ அதற்குத் தகுந்த முறையில் நடத்த முடியாது. ஆகையினால் எல்லோருடைய அடிப்படை எண்ணமும் ஜனநாயகம் இருக்கவேண்டும் என்பதுதான். ஜனநாயக அரசாங்கம் **Dictatorship** மாதிரி வேலை செய்ய முடியாது என்று இருந்தாலும், அதிலே பாதியாவது நாம் செய்யமுடியும் மனது இருந்தால். அந்த முறையில், பாதுகாப்புக்குத் தகுந்த முறையில் நம்முடைய வேலையைத் துரிதமாகச் செய்யவேண்டும். ஏதோ விவசாயத்தையும் கைத்தொழிலையும் மாத்திரம் சொல்லிக்கொண்டிருந்தால் போதாது. நாம் செய்ய வேண்டிய சேவையை அதிகமாகச் செய்ய வேண்டும். அதற்குத் தகுந்த ஊக்கமும் உணர்ச்சியும், நமக்குள் என்ன பாகுபாடு இருந்தாலும், எவ்வளவு கட்சிகள் இருந்தாலும் கூட, அதை எல்லாம் ஒரு பக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு, இப்பொழுது செய்யவேண்டிய கடமையைச் செய்வோமாக.

4th March 1963] [திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்]

தவிர, Home Guards விஷயமாக முந்தா நாள் சட்டம் செய்யப் பட்டது. அது ஏதோ ஒரு ஜில்லாவுக்கு ஆயிரம் என்று சொல்லப் பட்டது. இந்த ஆயிரம் எல்லாம் போதாது. ஒரு கிராமத்திற்குக் குறைந்தது இரண்டு மூன்று தொண்டர்களாவது இருக்க வேண்டும். நகரங்களுக்கு ஜனசக்திக்குத் தகுந்தபடி ஏற்பட வேண்டும். அப்படி இருந்தால்தான் நாம் ஏதாவது செய்ய முடியும். இதைப் போலீசிடம் ஒப்படைத்தால் போதாது. Retired Commander யாராவது இருந்தால் அவர்களை உபயோகம் செய்து கொள்ள வேண்டும். போலீஸ் எல்லாம் சாதாரண காலத் தில்தான். ஜனங்களிடம் ஏதாவது கஷ்டம் ஏற்படுகிறபோது, அதை வளரவிடாமல் பார்த்துக் கொள்ளுவதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் சிலபேர் இருக்க வேண்டும். ஜனங்களுக்கு தைரியம் சொல்ல, தொண்டு செய்ய குறைந்தபட்ச படை வேண்டும். அதற்குத் தகுந்த முறையில் இல்லை என்றால் ரொம்பவும் கஷ்டம் தான் வரும். சென்னையில் எம்டன் ஒரு குண்டு போட்டதற்கு என்ன நடந்தது என்பதை நாம் பார்த்தோம். இப்பொழுது அப்படி இருக்காது. இப்பொழுது காலம் வேறு, அப்பொழுது காலம் வேறு. இப்பொழுது ஜனங்களுக்கு விழிப்பு இருக்கிறது.

திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர் : அதைக் கேட்டே ஒருவர் செத்துப் போய்விட்டார்.

திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் : ஆகையினால் நாம் செய்ய வேண்டியதை இன்னும் துரிதமாகச் செய்வோமாக. அமைச்சர்கள் எல்லாம் ஏதோ மத்திய அரசாங்கம் செய்யும் என்று நினைத்துக் கொண்டிருந்தால் போதாது. இளைஞர்கள், அனுபவம் உள்ளவர்கள் எல்லோரும் தான் இருக்கிறார்கள். கொஞ்சம் அதிக ஊக்கத்துடன் வேலை செய்ய வேண்டும். உணர்வும் ஊக்கமும் இல்லாமல் இருந்தால் மனிதன் இருந்தும் இறந்தவன்தான். ஆகையினால் இறக்கப்போகிறோம் என்ற எண்ணம் வந்தாலே தொல்லை. எப்பொழுதும் இறப்பு இருக்கிறது. இருந்தாலும் நாம் இருப் போம் என்ற எண்ணம் கொண்டிருக்கிறோம். ஆகையினால் தான் உலகம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் வேலை செய்வதற்கு நாம் தகுந்த முறையில் வேலை முறைகளை வகுக்க வேண்டும்.

குறிப்பாக இந்த சந்தர்ப்பத்தில் அதிகப் பணம்தான் வேண்டும். எந்த Section க்கு எவ்வளவு வரி போட வேண்டும் என்று தெரியவேண்டும். எங்கே அறியாமை இருக்கிறதோ எங்கே ஒற்றுமை இல்லையோ அந்தப் பகுதியில் அதிகமாகச் சுரண்டலாம் என்று நினைக்கிறோம். எங்கே பலஹீனம் இருக் கிறதோ அங்கே இன்னும் பலஹீனமாக ஆக்கி விட்டால் நாம் தான் தொல்லைப்படவேண்டும். இதையெல்லாம் சரியான முறையில் செய்வதற்கு நாம் இன்னும் ஊக்கம் உண்டாக்கவேண்டும். தியாகமும் வேண்டும். எல்லோரும் தொல்லைப்படுகிறபோது தியாகம் இல்லை என்று சொல்ல முடியாது. கொஞ்சம் அதிகமாக,

[திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்] [4th March 1963

அதற்குத் தகுந்த அளவு தியாகம் செய்ய வேண்டும். ஆகையினல் அந்த முறையில்தான் சேவை செய்யவேண்டும். இதை நினைத்துச் செய்வதாகப் படவில்லை. அதிலும் சாதாரணமாக திட்டம் நடக்க வேண்டும் என்ருல் மேல் திட்டம் சரியாக இருக்கவேண்டும். அது இல்லாவிட்டால் எல்லாம் விழுந்துவிடும். அந்த முறையில் வேலை செய்யவேண்டும். நாலு மாதமாகிவிட்டது அங்கே யுத்தம் நிறுத்தி. இப்பொழுது கிராமங்களிலும் மற்ற இடங்களிலும் என்ன நடக்கிறது என்று பார்க்கிறபோது, வேடிக்கை பேசுகிற நிலையில்தான் இருக்கிறது. எவ்வளவு தூரத்தில் இருக்கிருேம் என்ற எண்ணம் படவில்லை. இந்த எண்ணம் தலைவர்களுக்கும் இல்லை. நாம் என்ன செய்ய முடியும்? நாம் செய்த தவறு. இதைக் கொஞ்சம் ஒவ்வொரு மாகாண அரசாங்கமும் சட்டசபையிலே தீர்மானம் போட்டு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி இன்னும் உற்சாகமாகவே வேலை செய்யவேண்டும் என்று சொல்லவேண்டும். எல்லோரும் அவர்கள் செய்வார்கள் என்று இருந்துவிட்டால் எல்லோரும் தொல்லைப்படவேண்டியதுதான். அவர்களுடைய பொறுப்புதான் என்று நினைத்துக்கொண்டு இருந்தால் போதாது. நமக்கும் பொறுப்பு உண்டு என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் பிரயோஜனம் இல்லை. அந்த முறையில் ஏதாவது செய்வார்களென்று நம்புகிறேன்.

தவிர உணவு உற்பத்தியிருக்கிறது. முதலில் உணவு வேண்டும், மூலப் பொருள்கள் வேண்டும். உணவு உற்பத்தி செய்யவேண்டு மென்ருல் விவசாயிகள் நல்ல முறையில் வைக்கப்படவேண்டும். விவசாயம் நல்ல முறையில் வைக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க் கும்போது, சென்ற 15 ஆண்டுகளாக நாம் பலவிதங்களில் பல சட்டங்கள் செய்திருக்கிருேம். நமக்கே தெரியாது என்ன சட்டம் செய்தோம் என்று. ஒவ்வொரு மந்திரிக்கும்கூட இவ்வளவு சட்டம் செய்தோமென்பது மறந்து விடுகிறது. அந்த முறையில் போகும் போது அடுக்காக பத்து, இருபது என்று சட்டம் வந்துகொண்டே தான் இருக்கின்றன. அநேகம் பேருக்கு என்ன சட்டம் இப் போது இருக்கிறது என்பதே தெரியாது. பழைய சட்டத்தை வைத்துக்கொண்டே பேசிக்கொண்டிருக்கிருேம். சட்டம் எங்கு குறைவாக இருந்து ஜனங்களுடைய ஒழுக்கமும் நடத்தையும் உற்சாகமுடன் வேலை செய்கிறதோ அங்குதான் ஜனங்கள் நன்ருக ஆளப்படுகிருர்கள் என்று அர்த்தம். அங்குதான் ஜனங்கள் உணர்ந்து நடக்கிருர்கள் என்று அர்த்தம். எங்கே சட்டம் மட்டும் செயல்படுகிறதோ அங்கு ஜனங்கள் அறியாமையில் இருக்கிருர்கள் என்று பொருள். சட்டம் ஒன்றும் செய்யாது. எவ்வளவோ சட்டம் செய்கிருேம். அதன் பலன் என்ன? கிம்பளம் கம்பளம் என்று போய்க்கொண்டிருக்கிறது. சட்டம் பயன்படும் முறையில் நடத்தப்படவில்லை. அதிக கவனம் வைத்து சட்டத்தை அமல் நடத்த ஏற்பாடு செய்வார்களானல், அதிக வரி நாம் போட வேண்டிய அவசியமிருக்காது. என்னுடைய அபிப்பிராயம், சேல்ஸ் டாக்ஸ் முப்பது கோடி ரூபாய்க்கு வசூல் ஆகும், சரியானபடி வசூல் செய்தால். வேறு ஒரு வரியும் போடவேண்டியதில்லை. எனக்குத் தெரியும் அது எப்படி நடக்கிறது என்று. எல்லோருக்

4th March 1963] [திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்]

கும் தெரியும். சொல்வதற்குத் தயங்குகிறார்கள். வேறு ஒன்றும் இல்லை. எவ்வளவு பேர் சாமான்கள் வாங்குகிறார்கள், அதற்கு பில் வருகிறது. உங்கள் வீட்டிலும் தெரியும். மந்திரிகள் முதற்கொண்டு எல்லோருக்கும் சொல்கிறேன். ஆகையால் எவ்வளவு பேர் தகுந்த முறையில் கணக்கு வைத்து தகுந்தமுறையில் வருஷா வருஷம் கட்டுகிறார்கள்? யார் கொஞ்சம் நாணயமாக இருக்கிறானோ அவனுக்குத் தொல்லை. நாணயமாக இல்லாமல் போவதற்கு சட்டம் இடம் தருகிறது. அதைக் கவனித்தால் ஒழிய அதிகமான கண்காணிப்பு அதற்குத் தேவைப்படும். சட்டம் சரியானபடி பயன்படுத்தப்படுகிறதா என்பதைப் பார்க்காவிட்டால் எவ்வளவு சட்டம் செய்தாலும் ஏளனமாகத்தான் ஜனங்கள் பேசுவார்கள். மந்திரிகள் எதிரில் பேசமாட்டார்கள். வெளியே சென்று பார்க்க வேண்டும். அந்தக் காலத்தில் நாட்டில் என்ன நடக்கிறது என்று மாறுவேடம் போட்டுக்கொண்டு அரசர்கள் ஜனங்கள் குறைகளைப் பார்த்தார்கள் என்று கேள்விப்படுகிறோம். ஆனால் இங்கு நாம் 4-10 p.m. எதிரில் வந்து சொன்னாலும் கவனிப்பது இல்லை. சட்டசபையில் பேசுகிறோம். அது அப்படித்தான் பேசுவார்கள், நாம் செய்வதைச் செய்துகொண்டே இருக்கலாம் என்று போகிறார்கள். எதைச் சொன்னாலும் அதில் நல்லது இருக்கிறதா என்று பார்த்து இருந்தால் அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும். எல்லோருக்கும் தான் அரசாங்கம். எதிர்க்கட்சிக்காரர்கள் எது சொன்னாலும் பயனுள்ளது இருந்தால், அதை எடுத்துக்கொண்டு அதற்குத் தகுந்தபடி நடைமுறையில் செய்யவேண்டும். அவர்களும் நம் சகோதரர்கள்தான். இங்கு பிறந்தவர்கள், இங்கு வாழ்கிறவர்கள் இங்கேயே மடிகிறவர்கள். அவர்களிடத்தில் அதிகமான ஒரு துவேஷத்தை உண்டாக்கிக்கொண்டு எலக்ஷன் ஆரம்பித்தால் கொஞ்சநஞ்சம் சமாதானம் இருப்பதையும் அது கெடுத்துவிடும். அதற்காக எலக்ஷன் வேண்டாமென்று சொல்லவில்லை. அதன் ரிசல்டை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். சொன்னால் ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள். நானும் இதைச் சொல்லத் தேவையில்லை. சட்டசபையில் இருப்பதால் சொல்கிறேன். சொல்வதில் பிரயோ ஜனம் இல்லை என்பது எனக்குத் தெரியும். நானும் ஒரு கட்சி என்று வைத்துக்கொண்டு பத்து பேரை சேர்த்துக்கொண்டு சொன்னால் அதைக் கேட்பீர்கள். நான் அதைச் செய்வதற்குத் தயாராக இல்லை. அதுவரையிலும் இப்படித்தான், இருப்பீர்கள் கேட்கமாட்டீர்கள். யார் பேரிலும் எனக்குத் துவேஷம் இல்லை. நாடு இருக்கிற நிலைமையில் உற்சாகமற்ற நிலையில் செய்யவேண்டிய கடமையைச் செய்யாவிட்டால் என்ன ஆகுமென்று நினைக்கும் போது வருத்தமாக இருக்கிறது. அந்த நினைப்பில் எனக்குச் சில நாட்கள் தூக்கமே இல்லை. அந்த முறையில் எனக்குச் சில நாட்கள் கழிந்தன. எனவே என் மனம் அதை நினைத்து தொல்லை கொடுத்துக்கொண்டேயிருக்கிறது. தினசரி பத்திரிகை பார்க்கும் போது அந்தத் தொல்லை அதிகரித்துவருகிறது. நாம் பிலாசபி பேசிக்கொண்டு இருக்கிறோமே தவிர, செய்யவேண்டியதைச் செய்யவில்லை. டிமொபிலைசேஷன் சோல்ஜர்கள் என்று 35 லட்சம் பேர்களை முன் வைத்தார்கள். அவர்களை 45 வயதுவரையிலும்

சேர்த்தால் பத்து பதினைந்து நாட்கள் டிரெயினிங் கொடுத்துக் கொண்டுபோய் நிறுத்தலாம் என்று ஏதோ சொல்கிறார்கள். அது போதாது. வீடு பற்றி எரியும்போது கிணறுவெட்டிவிட்டு அணைக்கப் போவது போல இருக்கிறது. இதையெல்லாம் மாகாண அரசாங்கம் அதிகமாக வற்புறுத்துவதற்கு முயலவேண்டும். டிபென்ஸ் கமிட்டியில் மந்திரிகள் சிலர் இருக்கிறார்கள். ஏன் வற்புறுத்தக்கூடாது? அவர்கள் அப்படித்தான் பேச்சிலே உலகத்தை அடக்கிவிடலாம் என்று நினைக்கிறார்கள். விரோதி களிடம் அப்படிப் பேசிக்கொண்டிருந்தால் பிரயோஜனம் இல்லை. பாய் பாய் எல்லாம் போய்விட்டது.

விவசாயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டுமென்று இருக்கிறது. ஒருபக்கம் சட்டங்கள் குவிகின்றன. சென்ற 15 ஆண்டுகளில் எவ்வளவு நாம் வரி போட்டிருக்கிறோம்? அதன் பலன் என்னவென்று நமக்குத் தெரியும். நான் சொல்லவில்லை. பட்ஜெட்டில் நீங்கள் காட்டியிருக்கிறீர்கள். அதை விமர்சனம் செய்தால் எனக்கு எழுச்சி உண்டாகும். அதனால் இந்த சந்தர்ப் பத்தில் நான் அதைப் பேசிக்கொண்டு இருப்பதில் பிரயோஜனம் இல்லை. நமக்குப்பொறுப்பு அதிகமாக இருக்கிறது. மற்ற கட்சி களைவிட நமக்கு அதிகப்பொறுப்பு இருக்கிறது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். மெஜாரிடி நாம் வைத்துக்கொண்டிருக் கிறோம். மற்றவர்கள் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, நாட்டைக் காப்பாற்றவேண்டியது தான் எல்லோருடைய கடமையும். அதற்குப் பிறகு வீட்டுச் சண்டை போடலாம். இப்போது அதைப்பற்றிப் பேசுவதில் பிர யோஜனம் இல்லை. ஆகையால் விவசாயத்தைக் கவனிப்போம். விவ சாயிகளுக்கு வரிபோட்டிருப்பதைப் பார்த்தால், எவ்வளவு வரி ஜாஸ்தியாகப் போயிருக்கிறது என்பதைப் பார்த்தால் நாளடை வில் ஒன்றுக்கு மூன்று மடங்காகிவிடுகிறது. ரூபாய்க்கு ஒன்பது அணா கூடியதோடு யூனியன் வரி அரை ரூபாய்க்கு மேல் ஆகிறது. இந்த நிலத்தீர்வை, நீர்த்தீர்வை மூன்று மடங்காக ஆகும். ஏழை களுக்குத்தான் நாம் செய்கிறோம். ஆனாலும் ஏழைகள் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள்? சாமான்கள் வாங்கும்போது டைரக்ட் டாக்ஸ், இன்டைரக்ட் டாக்ஸ் என்று இருக்கிறது. நேர்முக வரி, மறைமுக வரி என்பது அது. மறைமுக வரி பூராவும் உபயோகக் கிறவர்கள்தான் கட்டுகிறார்கள். வசூல் செய்கிற ஏஜண்டுகள் அதைச் சரியாகக் கொடுப்பதில்லை. இப்போது நயா பைசா வந்தது. முன்பெல்லாம் ஒரு தம்பிடிக்கு மிளகாய் வாங்குவான். இப்போது இரண்டு தம்பிடி ஒரு யூனிட்டாகிவிட்டது. அதை யாராவது நினைத்தார்களா? செய்வது எல்லாம் ஏழைகளுக்கு என்கிறார்கள். ஒரு தம்பிடிக்கு உப்பு, புளி வாங்கிய குடியானவன் இரண்டு தம்பிடியில் வாங்கவேண்டும். ஏழையில்லையா? அவர் களுக்குத்தான் நாம் சௌகரியம் செய்கிறோம். மற்றத் துறையி லும் அதிகமாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது. ஒவ்வொன்றை யும் விமர்சனம் செய்தால் இரண்டு மணி நேரம் பேசலாம். முந்தா நாள் ஒரு சட்டம் வந்தது, நில வரி நீர் வரியை உயர்த்துவதற்கு.

4th March 1963] [திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்]

இது இந்த சந்ர்ப்பத்தில் உற்சாகத்தைக் கொடுக்குமா? சென்ற வருஷ பட்ஜெட்டைப் பார்க்கும்போது, வருவாய் இவ்வளவு வரும் என்று போட்டோம். அதில் எவ்வளவு வந்திருக்கிறது? மதிப்பீடு குறைவாகப்போட்டு பட்ஜெட் தயாரிக்கப்படுகிறது. கடைசியில் பார்த்தால் அதிகமாக வருகிறது. அது பைனுன்ஸ் டிபார்ட் மெண்ட்டால் செய்யப்படுகிறது. அவர்களுக்குத் தகவல் தெரிய வில்லையா? வேண்டுமென்று செய்கிருர்களா என்று தெரியவில்லை. ஆகையால் பட்ஜெட் போடப்பட்டிருக்கிற முறையைப் பார்த்தால், வருவாயைக் குறைத்து செலவு அதிகமாகத்தான் போடப்பட் டிருக்கிறது. போடப்பட்டு வருகிறது.

இவ்வளவு பேர் ஏமாற்றியும் கூட வசூலில் அதிகமாக வருகிறது. ஆகையால் அதையும் கவனிக்க வேண்டும். எல்லாவற்றையும் அமைச்சர்களே பார்த்துக் கொள்ளுவார்கள் என்று அரசாங்க ஊழியர்கள் தங்கள் கடமையைச் செய்யாமல் இருக்கக்கூடாது. அவர்கள் தங்கள் கடமையைச் செய்யாமல் இருந்தால், இன்று மத்திய அரசாங்கம் அவர்கள் வருமானவரியை 40 ரூபாயிலிருந்து 240 ரூபாய்க்கு ஏற்றியிருக்கிறதே அந்த மாதிரித்தான் ஏற்படும். அதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஏன் வரி அதிகம் செய்யப்படுகிறது என்பதை அவர்கள் கவனிக்க வேண்டும். அரசாங்க ஊழியர்கள் தங்கள் கடமையைச் சரியாகச் செய்யாததால், சட்டத்தைச் சரியான முறையில் உபயோகப் படுத்தத்தகுந்த முறையில் இலாக்காக்கள் சரியாக வேலை செய் யாததால், வருவாய் குறைவாக மதிப்பிடப்பட்டு, வரி அதிகப் படுத்தப்படுகிறது. ஆனால் உண்மையாக வசூலில் பார்க்கும்போது, இந்த ஊழலிலும் கவனிக்கப்படாமல், இருக்கும்போதும் கூட, வருவாய் அதிகமாக வருகிறது. இன்னும் சரியாக கவனித்தால் 30 கோடி ரூபாய் சேல்ஸ் டாக்ஸில் வரும். சென்ற வருடம் பட்ஜெட் விவாதத்தின் போது கூட அதிகமாக வருவாய் வரும் என்று சொன்னேன். இப்போது நான் தெரிவித்ததுபோல 5, 6 கோடி ரூபாய் கூடி வந்திருக்கிறது. இன்னும் 5, 6 கோடி ரூபாய் வரலாம். இப்போது அதிகரிக்கப்பட்டுள்ள வருமான வரி யிலிருந்து மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கங்களுக்கு பங்கு தரப்போவதில்லை என்பதை நம்முடைய அமைச்சர்கள் ஞாபகத் தில் வைத்துக் கொள்ள வேண்டும். மத்திய நிதியமைச்சர், வரியில் மாநில அரசாங்கத்துக்குப் பர்தா கிடையாது என்று அதிலேயே தெரிவித்து விட்டார். ஆகவே இனிமேல் அந்த வரியில் நமக்குப் பங்கு அதிகமாக வரும் என்று நினைக்க முடியாது. நாம் போடும் வரிகளைத் திறமையாக, ஜனங்களுக்குத் தொல்லையில்லாமல் வசூலிக்க வேண்டும். 4-30 p.m.

விவசாய உற்பத்தி பெருக வேண்டுமென்றால், விவசாய இலாக்கா நன்ருக வேலை செய்ய வேண்டும். நல்ல அனுபவமுள்ள அமைச்சரிடம்தான் விவசாய இலாக்கா இருக்கிறது. அவரும் ஓடிக் கொண்டுதான் இருக்கிருர். ஆனால் புள்ளி விவரங்கள்

(Figures) அவர்கள் கொடுப்பதைப் பார்க்கும்போது, எனக்கு அது சரியானதாகத் தோன்றவில்லை. நான் சென்ற வருடமே பட்ஜெட்டின் மீது பேசும்போது தெரிவித்தேன். அப்படி நான் தெரிவித்ததில் சில பேருக்கு என் மீது கோபம் கூட ஏற்பட்டது. இந்த விளைச்சல் போட்டி வைத்து, பரிசு கொடுக்கிறார்கள். சாதாரணமாக, நாலாயிரம் ராத்தல் முதல் ஐயாயிர ராத்தல் விளைந்திருக்கிறது. ஆனால் 8,000 ராத்தல் விளையக்கூடிய 12 ஆயிரம் ராத்தல் விளைந்திருக்கிறது என்று புள்ளி விவரம், கணக்குக் கொடுக்கிறார்கள் அல்லவா, அதை நான் சென்ற வருடம் **Challenge** செய்தேன். என்னுடைய நிலத்தைக் கொடுக்கிறேன், வசதியெல்லாம் செய்து கொடுக்கிறேன், செய்து காட்டச் சொல்லுங்கள் உங்கள் விவசாய டிபார்ட்டு மெண்டை என்று அமைச்சருக்கு சவால் விடுத்தேன். இதை எதற்கு இங்கு குறிப்பிடுகிறேன் என்றால், இந்தப் புள்ளி விவரங்களைக் காட்டித் தெரியாதவர்களை ஏமாற்றலாமே தவிர, தெரிந்தவர்களை ஏமாற்ற முடியாது என்பதற்காகத்தான். நானும் ஒரு விவசாயி. நானும் நிலத்தில் உழைத்துக் கொண்டிருக்கிறவன். ஆகையால் எவ்வளவு அதிகபட்சம் விளையும் என்பது எனக்குத் தெரியும். அந்த அனுபவத்தின் பேரில் சொல்லுகிறேன், இம்மாதிரி விளைச்சல் போட்டி வைத்து பரிசுகள் கொடுத்துக்கொண்டு வந்தால், தவறுதல் செய்ய அரசாங்கமே ஊக்குவிப்பது போல் ஆகும். நீங்கள் தெரியாமல் செய்கின்றீர்கள் என்று நான் சொல்ல வில்லை. விவசாய இலாக்கா சரியான முறையில் செய்கின்றதா என்பதை இன்னும் அதிகமாக நீங்கள் கண்காணிக்க வேண்டும். ஒன்றிரண்டு இடங்களில் விளைச்சல் போட்டியில் விளைச்சல் அதிக மாக வரலாம். அனேக இடங்களில் வராது. அப்படி இருக்கும் போது ஒவ்வொரு ஜில்லாவிலும் 8,000 ராத்தல் விளைய வேண்டியது 12,000 ராத்தல் விளைந்தது என்று சொல்லி பரிசு கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகலால் தான் நான் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. வரி போடும்போது எந்த முறையில் அது வசூலிக்கப்படுகின்றது; யாருக்கு அதனால் தொல்லை அதிகமாக இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். பணக்காரர்களுக்கு இருந்தால் பரவாயில்லை. ஏனென்றால் அவர்கள் ஏதாவது சேர்த்து வைத்திருப்பார்கள். அவர்களுக்குத் தெரியும், இது வரப்போகிறது என்று. ஆகையால் சேர்த்து வைத்திருப்பார்கள். கொஞ்ச நாளாவது அவர்கள் எப்படியோ காலம் தள்ளிவிடலாம். ஏழைகள் ரொம்ப காலம் தள்ள முடியாது. அதனால் நமக்குத் தொல்லைதான் வரும். பலமுறையில் பொருள்கள் வாங்க வேண்டும், சாப்பாட்டுப் பொருள் நமக்கு வேண்டும். உழைப்பும், பணமும் வேண்டும். ஒற்றுமையும் வேண்டும். அதற்கு நாம் உணர்வை அதிகமாக உண்டாக்கிக் கொண்டிருக்கவேண்டும். அந்த முறையில் வேலை செய்தால்தான் நாம் தப்பித்துக்கொள்ள லாம். இல்லையென்றால் எல்லோரும் போக வேண்டியதுதான்.

விவசாயத்தில் உற்பத்தியைப் பெருக்கத்தகுந்த முறையில் **Project** கள் எல்லாம் நன்றாகச் செய்து கொண்டு வருகிறார்கள். இன்னும் ஏரிகள், குளங்கள் இவற்றையெல்லாம் எங்கெங்கே

4th March 1963] [திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்]

செப்பனிடவேண்டுமென்று பார்த்து, அதற்குத் தேவையான பணம் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலைகளையும் சரியான முறையில் செய்வதற்கு கண்காணிப்பு இன்னும் அதிகம் வேண்டும். கண்காணிப்பு இல்லாமல் வரியைப் போட்டு, வசூலித்து நாம் கொடுத்துக் கொண்டேயிருந்தால், எஸ்டிமேட்டுக்கு மேல் ஒன்றுக்கு நான்கு மடங்கு செலவாகிறது. நான் சென்ற தடவையே இதைக் குறிப்பிட்டிருக்கிறேன். இப்போது இன்னும் அதிகமாகச் செலவாகிறது. இதற்கு என்ன காரணம் என்று என்ஜினியர்களைத் தனியாகக் கேட்டால் சொல்லுவார்கள். அமைச்சர்கள் என்ற முறையில் கேட்க வேண்டாம். மற்ற முறையில் தெரிந்துகொள்ளுங்கள் என்றுதான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதிகமாக **Estimate** கள் போட்டு, பணம் குறிப்பிட்ட வேலைக்கு எவ்வளவு வேண்டுமோ, அதற்கு மேல் அதிகமாகச் செலவழிக்கப்படுகிறது என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதைக் கண்காணித்தால்தான் குறைந்த செலவில் அதிக வேலையைச் செய்ய முடியும். இப்பொழுது நாம் அதிகப் பணத்தைச் செலவழித்து, குறைந்த வேலையைச் செய்கின்றோம். நான் பட்ஜெட் விவாதங்களின்போது பல முறை ஒன்றை ஞாபகப்படுத்தியிருக்கின்றேன். அது என்ன வென்றால், பட்ஜெட்டில் செலவழித்த பணத்தை மட்டும் போடுகின்றீர்கள். செலவழித்த பணத்துக்கு எவ்வளவு யூனிட் வேலை நிறைவேறிற்று என்று அந்த யூனிட்டையும் போட வேண்டும். சென்ற வருடம் இவ்வளவு பணத்துக்கு இவ்வளவு வேலை நடந்திருக்கிறது; இந்த வருடம் இவ்வளவு பணத்துக்கு இவ்வளவு நடந்திருக்கிறது என்று சொல்லவேண்டும். ஒருசில இலாக்காக்களில் சொல்லப்படுகிறது. அனேக இலாக்காக்களில் சொல்லப்படுவதில்லை. அதைச் சொல்ல வேண்டும். **Standard rates** ஒவ்வொரு ஜில்லாவிலும் உண்டு. ஒவ்வொரு இலாக்காவும் **Standard rates** வைத்துக் கொண்டிருக்கிறது. அதையொட்டி இன்ன திட்டத்துக்கு இவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது; எவ்வளவு வேலை ஆகியிருக்கிறது; இந்த வருடம் எவ்வவளவு வேலை ஆயிற்று என்று அந்தத் தகவலைப் பற்றிய குறிப்பை ஏன் பட்ஜெட்டில் சேர்க்கக்கூடாது? அதைச் சேர்க்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அது தவிர, ஒவ்வொரு இலாக்காவிலும் எவ்வளவு ஊழியர்கள் இருக்கிறார்கள் என்று இந்த வருட பட்ஜெட்டிலிருந்து உடன் கண்டுபிடிக்க முடியாது. எல்லாவற்றையும் கூட்டிப் போட்டால் தான் சொல்ல முடியும். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இந்த விவரங்கள் போடப்பட்டிருந்தன, இப்போது அவை போடப்பட வில்லை. அதனால் ஊழியர்கள் அதிகமானார்களா, குறைவானார்களா என்று யாரும் தெரிந்து கொள்ள முடிவதில்லை. ஏன் அந்த விவரங்களைப் போடக்கூடாது என்று கேட்கிறேன். முன்பு 80 ஆயிரம் ஊழியர்கள் இருந்தார்கள் என்றால், இப்போது எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? அதே எண்ணிக்கை ஊழியர்களை வைத்துக் கொண்டு இப்போது வேலை செய்ய முடியாது. வேலை அதிகரித்

[திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்] [4th March 1963

திருக்கிறது இப்போது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் எவ்வளவு பேர் வேலை செய்கிறார்கள், அதற்குத் தகுந்த அளவு வேலை நடைபெறுகிறதா என்பது நமக்குத் தெரியவேண்டும். வரிபோட்டு பணத்தை வாங்கி, ஊழியர்களை நியமித்து அவர்கள் ஊதியத்துக்கென்று ஏராளமாகப் பணம் செலவு செய்கின்றோம். அதற்குத் தகுந்த முறையில் வேலை நடக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். ஒரு கலெக்டருக்கு 5 Personal Assistants 7 Personal Assistants போட்டிருக்கிறோம். கலெக்டர் ஊரைச் சுற்றிக்கொண்டிருப்பார். எல்லா வேலையையும் P.A. வோடு விட்டுவிடுவார். என்ன வேலை நடக்கிறது என்றே அவருக்குத் தெரியாது. Development Council கூட்டத்துக்குத்தான் வருவார். அதற்குக்கூட யாராவது ஞாபகப் படுத்தவேண்டும். அந்த முறையில் இருக்கிறது. அப்படியெல்லாம் இருப்பதில் பிரயோஜனமில்லை. கலெக்டருக்கு அதிக வேலை யிருக்கிறது என்று P.A. -க்களைக் கொடுத்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தகுந்த முறையில் வேலையைப் பங்கிட்டுக் கொடுத்து, எவ்வளவு வேலை ஆகியிருக்கிறது என்று கலெக்டர் கண்காணித்து, வேலை சரியாக நடக்காவிட்டால் அவர்களை வேலை யிலிருந்து நீக்கத் தக்க முறையில் கண்காணிக்கத்தான் கலெக்டர் போடப்பட்டிருக்கிறார். ஏன் அந்த வேலையை அவர் சரியாகக் கவனிக்கக்கூடாது? இன்று தாசில்தார்கள், ரெவின்யூ இன்ஸ் பெக்டர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக் கெடுங்கள். அப்போது புரியும் உங்களுக்கு, வேலை முன்பு நடந்ததை விட மிகக் குறைவாக நடக்கிறது என்பது. ஏன் அப்படி நடக்கிறது என்றால், சரியான கண்காணிப்பு இல்லை. கலெக்டர் சரியாக வேலை செய்யவேண்டும், கண்காணிக்க வேண்டும். அமைச்சர்கள் அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய் கிறார்கள். நீங்களும் ஏன் அங்கே செல்லும்போது இதைக் கண் காணிக்கக்கூடாது? நான் ஏதோ குறை கூறுகிறேன் என்று நினைக்க வேண்டாம். இருக்கின்ற நிலையை யாராவது சொல்லி யாக வேண்டும். எல்லோரும் பயந்து கொண்டிருந்தால், சொல்லு வது யார்?

“வருமுன்னர்க்காவாதான் வாழ்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக்கெடும்”.

என்ற முறையில் ஆகிவிடும். அதற்காகத்தான் சொல்லுகிறேன்.

“இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.”

என்பதை நன்றாக உணர்ந்து செயல்படவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, இப்போது கல்விக்கு அதிகப் பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. 28 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். கல்வி அவசியம் வேண்டியதுதான். அதற்குப் பணம் மட்டும் ஒதுக்கி விட்டால் போதாது. போதுமான உபாத்தியாயர்கள் இருக் கிறார்களா, ஆரம்பிக்கப்பட்டுள்ள ஸ்தாபனங்கள் சரியாக நடக்

4th March 1963] [திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்]

கின்றனவா, அதற்கு வேண்டிய வசதிகள் சரியாக இருக்கின்றவா என்று அதையும் பார்க்க வேண்டும். அத்துடன் மேலும் பல பள்ளிகளை நாம் உண்டாக்க வேண்டும். அதற்குத் தகுந்த வசதி களையும் செய்ய வேண்டும். எங்கள் வடலூரில் ஒரு Training School இருக்கிறது. நான்தான் அதை வைக்கச் சொன்னேன். அது எப்படி நடக்கிறது என்றால், சென்ற வருடத்தில் மாண வர்கள், உபாத்தியாயர்களை மூன்று மணி நேரம் உள்ளே போட்டு மூடிவிட்டார்கள். இப்போது நான் அந்த விபரத்தைச் சொல்ல வரவில்லை.

திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர் : ஏன்?

திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் : அது டிபார்டுமெண்டுக்குத் தெரியும். அதை அவர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள். அதோ இருக்கிறாரே திரு. கஜபதி நாயகர் அவரைக் கேளுங்கள் தெரியும். (சிரிப்பு). அந்த முறையில் நடக்கிறது. ஆகையால் கண்காணிப்பு இன்னும் அதிகம் வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். Elementary Education-க்கு தனியாக ஒரு D.P.I. போட்டால் கூட பரவாயில்லை. முப்பது ஆயிரம் பள்ளிக்கூடங்கள் இருந்தால் எப்படி ஒருவர் கண்காணிக்க முடியும்? முன்பு 500 ஹைஸ்கூல் இருந்தது. இப்பொழுது 1,800 இருக்கிறது. ஒருவரையே வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? அவரும் சுற்றிக் கொண்டே இருக்கிறார்; பணம் வசூல் செய்து கொண்டிருக்கிறார். அந்த வேலை செய்து கொண்டிருந்தால், போதும் என்று அவர் நினைக்கிறார். கண்காணிப்பு இன்னும் கொஞ்சம் தேவை. இல்லா விட்டால் இந்தப் பணமெல்லாம் வீண். உபாத்தியாயர்கள் தரம் குறைவு. Training School-லிலேயே இந்த நிலைமை. வரு கிற வருஷம் அவர்கள் உபாத்தியாயர்களாக வர இருக்கிறார்கள். 4-30 p.m.

இன்னும் மற்றத் துறையில் Industries ஐ எடுத்துக் கொள்ளுங்கள். எங்கள் ஊரிலே பக்கத்திலேயே ஒரு அம்பர் சர்க்கா வைத்திருக்கிறது. அங்கே என்ன நடக்கிறது? தனித் தனியாக (Capital expenditure, Recurring expenditure) எவ்வளவு Turnover என்று கண்டுபிடித்து எவ்வளவு Income, எவ்வளவு நஷ்டம் என்று ஏன் ஒவ்வொன்றுக்கும் போடக்கூடாது? ஏதோ ஒன்று இரண்டுக்குப் போட்டிருக்கிறார்கள். தகுந்த முறையில் போடவில்லை. ஆகையினால் தெரிந்துகொள்ள முடியாது. Industries அமைச்சர் கொஞ்சம் அனுபவம் உள்ளவர்தான். நன்றாகத்தான்வேலை செய்கிறார். அந்த இலாகா வேலைகளை இன்னும் கண்காணிக்கும் முறையில் நடத்தப்பட முயற்சிக்க வேண்டும். அரசாங்கத்தால் நடத்தப்படுவது எப்படி என்று தெரியவேண்டாமா? அங்கே மாதத்திற்கு 1,500 ரூபாய் Establishment charges ஆகிறது. உற்பத்தி 4,000 ரூபாய். நான் சொல்லவேண்டாம் அதற்கு மேலே. ஆகையினால் இம்மாதிரி நடக்கப் பணம் செலவு செய்கிறோம். எல்லா இடத்திலும் உற்சாகத்துடன்தான் ஆரம்பிக்கிறோம். அங்கே இருக்கிறவர்கள் சரியாக நடக்கிறார்களா என்று கொஞ்சம் கண்காணிப்பு

வேண்டும். இன்னும் மற்ற இடங்களில் எப்படி என்று எனக்குத் தெரியாது. இது பக்கத்திலே இருக்கிறதாலே நான் பார்த்தேன். இதை எல்லாம் close பண்ணினுலும் தேவலே என்று நினைக்கிறேன். இருக்கிறதும் கெட்டுவிடப் போகிறது. இதையெல்லாம் நினைத்து தகுந்த முறையில் சேவை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் எவ்வளவோ பேசவேண்டும். நான் பேசத் தயாராக இல்லே. கொஞ்சம் உணர்ச்சியுடனும் ஊக்கத்துடனும், மத்திய அரசாங்கம் தான் நம்மைக் காப்பாற்றும் என்று இருந்துவிடாமல், நாமும் அவர்களிடம் சொல்லி, உற்சாகப் படுத்தி, தகுந்த முறையில் அவர்களும் சேவை செய்து, நாமும் செய்து நமது நாட்டைக் காப்பாற்றுவோமாக.

* SRI K. BALASUBRAMANYA AYYAR: Mr. Chairman, Sir, the Budget Blue Books are as high as I stand and I must first express our gratitude to the Secretariat for having compiled so many Blue Books with so many accounts. But honestly the difficulty I have experienced, I should express. It is that one cannot go through all these blue books in the very shortest time possible that is allotted to us for the purpose of looking into them. These were placed on the table on Saturday.

(Deputy Chairman in the Chair.)

